பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

17 03 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. கடற்படை அதிகாரிகள் தகவல் தொழில்நுட்பங்களை கூடுதலாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. பிரதமர் திரு நரேந்திர மோடி, நியூசிலாந்து பிரதமர் திரு **Christopher Luxon**-வுடன் இணைந்து **Raisina** பேச்சுக்களை சற்றுமுன் புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.
3. ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
4. மின் உற்பத்திக்கு தேவையான நிலக்கரி போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.
5. உலகக்கோப்பை கபடி போட்டியில் இந்தியா 64-22 என்ற புள்ளிக்கணக்கில் இத்தாலியை வென்றது.

இனி விரிவான செய்திகள் ---

**<<<<<>>>>>**

கடற்படை அதிகாரிகள் தகவல் தொழில்நுட்பங்களை கூடுதலாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் கடற்படை பயிற்சி அதிகாரிகள் இடையே கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சர்வதேச அளவில் நாடுகளுக்கு இடையேயான மோதல் அதிகரித்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு நாடுகள் கூட்டு பயிற்சியில் ஈடுபட்டு, கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, நியூசிலாந்து பிரதமர் திரு **Christopher Luxon**-வுடன் இணைந்து **Raisina** பேச்சுக்களை சற்றுமுன் தொடங்கிவைத்தார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இதற்கான கூட்டத்தில், நியூசிலாந்து பிரதமர் தற்போது உரையாற்றி வருகிறார்.

முன்னதாக, நியூசிலாந்து பிரதமர், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து பேசினார்.

**<<<<<>>>>>**

ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் ரயில்வேத்துறை தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

பயணிகளுக்கு குறைந்த செலவில் தரமான சேவை வழங்க வேண்டும் என்ற நோக்கில் ரயில்வே செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஐந்தாண்டுகளாக ரயில் கட்டணங்கள் உயர்த்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில் நம் நாட்டில் ரயில் கட்டணங்கள் குறைவாகவே உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

ரயில் விபத்துகளை குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பயணிகளின் பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மின் உற்பத்திக்கு தேவையான நிலக்கரி போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மின்துறையிடமிருந்து நிலக்கரி தேவைக்காக பெறப்பட்ட கோரிக்கை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

மின் விநியோகமும் தொடர்ந்து கண்கணிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கென அமைச்சகங்களுக்கு இடையிலான துணைக்குழு அமைக்கப்பட்டிருப்பதையும் திரு கிஷன் ரெட்டி சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>

சிறுபான்மையினர் நலனுக்காக பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சிறுபான்மையினரின் சமூக பொருளாதார மேம்பாட்டை உறுதி செய்வதற்காக இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

எஃகு மற்றும் அலுமினியம் இறக்குமதிக்கு அமெரிக்கா 25 சதவீதம் வரி விதித்துள்ளதை மத்திய அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருவதாக நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மருந்து, வாகனம் மற்றும் செமி கண்டெக்டர் துறைகளுக்கு அமெரிக்கா இறக்குமதி வரி விதிக்கவில்லை என்று தெளிவுபடுத்தினார்.

**<<<<<>>>>>**

நாடு முழுவதும் பீடி தொழிலாளர்களின் நலனுக்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் **Shobha Karandlaje** கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், வீட்டுவசதி, சுகாதாரம், கல்வி உதவித்தொகை போன்றவை இந்த திட்டத்தில் அடங்கும் என்று குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் 49 லட்சத்திற்கும் மேற்பட்ட பீடி தொழிலாளர்கள் உள்ளதாகவும், அவர்கள் நலனை உறுதி செய்யும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

**<<<<<>>>>>**

முன்னாள் மத்திய இணையமைச்சரும், மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானின் தந்தையுமான டாக்டர் **‘Debendra Prathan ’** இன்று புதுதில்லியில் காலமானார், அவருக்கு வயது 84.

பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் தலைவர்கள் பலர் அன்னாரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**<<<<<>>>>>**

சீன உடனான உறவு குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ள கருத்துக்களை வரவேற்பதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த இணையஒலி நெறியாளர் **Lex Fridman** நடத்திய கலந்துரையாடலின்போது பிரதமர் திரு நரேந்திர மோடி, சீனா உடனான நல்லுறவு இருநாடுகளுக்கும் பயன் அளிக்கும் என்று குறிப்பிட்டருந்தார்.

இந்த கருத்தை வரவேற்றுள்ள சீன வெளியுறவுத்துறை, இந்தியாவுடனான உறவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறியுள்ளது.

இதற்கிடையே, திரு நரேந்திர மோடியின் இந்த கலந்துரையாடலை அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப், தமது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

**<<<<<>>>>>**

அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப், ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புதினுடன் நாளை பேச்சு நடத்துகிறார்.

இதனை ரஷ்ய அரசு உறுதி செய்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் திரு டொனால்டு ட்ரம்ப் இந்த பேச்சுக்களை நடத்த உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>**

இந்தியா – ஆஸ்திரேலியா இடையே பாதுகாப்பு கொள்கை தொடர்பான பேச்சுக்கள் இன்று புதுதில்லியில் நடைபெற்றன.

இந்தியாவின் சார்பில் இணைச்செயலர் திரு அமிதாப் பிரசாத் தலைமையிலான குழுவினர் இதில் பங்கேற்றனர்.

இருநாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

பாதுகாப்புத்துறையில் தொலைநோக்கு அடிப்படையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>**

மகாராஷ்ட்ரா சட்ட மேலவையின் ஐந்து இடங்களுக்கு வரும் 27-ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்பாளர்களை சிவசேனா – தேசியவாத காங்கிரஸ் கூட்டணி அறிவித்துள்ளது.

இதன்படி, சிவசேனா சார்பில் **Chandrakant – Raghuvanshi,** தேசியவாத காங்கிரஸ் கட்சி சார்பில் **Sanjay Khodke** வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.

பிஜேபி சார்பில் திரு **Sandeep Joshi, Sanjay Kenekar** மற்றும் **Dadarao Keche** வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து இடங்களுக்கு நடைபெறவுள்ள இந்த இடைத்தேர்தலில் இந்த ஐந்து பேரும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**<<<<<>>>>>**

ராஜஸ்தானில் அரசு அதிகாரிகள் தங்கள் பணிகளில் வெளிப்படைத்தன்மையை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்று அம்மாநில ஆளுநர் திரு **Haribhau Bagade** கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில் பயிற்சி அதிகாரிகள் இடையே கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அரசு திட்டங்களை திறம்பட அதிகாரிகள் செயல்படுத்த வேண்டும் என்றும் திரு **Haribhau Bagade** கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

புதுச்சேரியில் வாழ்நாள் முழுமைக்கும் பயன்படுத்தத்தக்க வகையில் சாதிச்சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரெங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுவை சட்டப்பேரவையில் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட அவர், நிர்வாக நடைமுறைகளை எளிமைப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதன்காரணமாக, பொதுமக்கள் அடிக்கடி அரசு அலுவலகங்களுக்கு வருவது தவிர்க்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பத்து, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பள்ளியிலேயே சாதிச்சான்றிதழ் வழங்கப்படும் என்றும் திரு ரெங்கசாமி தெரிவித்தார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை கபடி போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா முதல் ஆட்டத்தில் இத்தாலியை சென்றது.

**Wolverhampton** –ல் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா 64-22 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றிபெற்றது.

-----------

**Los Angeles**–ல் 2028-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை மீண்டும் இடம்பெற வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் குழுமத்தின் தலைவர் திரு **'Thomas Bach** இதற்கான அறிவிப்பை இன்று வெளியிட்டார்.

இதற்கான இறுதி ஒப்புதல் இந்த வாரத்தில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

----------------

**Nicosia** மகளிர் கிராண்ட்ப்ரிக்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் மற்றும் **Harika Dhronavalli** பங்கேற்ற ஆட்டங்கள் டிராவில் முடிவடைந்தன.

சைப்ரசில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாவது சுற்றில் திவ்யா தேஷ்முக் - உக்ரைனின் **Mariya Muzychuk** இடையேயான ஆட்டமும், **Harika Dhronavalli -** கிரீஸின் **Stavroula Tsolakidou** இடையேயான ஆட்டமும் டிராவில் முடிவடைந்தது.

------------------

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யுகி பாம்ரி 37-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

---------------

காவல்துறையினருக்கான தேசிய துப்பாக்கிச்சுடும் போட்டி சென்னையில் இன்று தொடங்கியது.

<<<<<END>>>>>